13th July 1957]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, அன்னியர்களிடம் இந்தியாவிற்குச் சுதந்திரம் தேவை என்று சொன்ன மிகப் பெரிய மகானுபாவர்களுடைய சிலைகளையும் வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : புதிதாகச் சிலை வைக்கக் கூடிய ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதாக சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, உத்தரப் பிரதேச சர்க்கார், அந்த ராஜ்யத்திலே உள்ள பிரிட்டிஷாரின் சிலைகளை உடனே அப்புறப்படுத்த வேண்டுமென்று உத்திரவிட்டிருப்பது இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால், அதே கொள்கையை அனுசரித்து இந்த ராஜ்ய அரசாங்கமும், இந்த ராஜ்யத்திலுள்ள பிரிட்டிஷாரின் சிலைகளையும் பொது இடங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு உடனடியாக உத்தரவிடுவதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உத்தரப் பிரதேசத்தில் அப்படிப் பண்ணினார்கள், ஆகவே, நாமும் அப்படிப் பண்ண வேண்டும் என்ற கொள்கையை நான் அனுசரிக்கத் தயாராய் இல்லை. இது சரியா இல்லையா என்று யோசனை செய்து முடிவு செய்வதற்குத் தயாராயிருக்கிறேன்.

SRI D. DASARATHAN : தலைவர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் மன்றோ சிலையைப்பற்றி கூறிய போது, "பொது மக்களிடத்திலே வெறுப் புணர்ச்சி இருக்காது ; ஆகவே, அதை நீக்குவதற்கு எந்த விதமான சந்தர்ப்பமும் இருக்காது" என்று குறிப்பிட்டார்கள். குறைந்தபட்சம், அங்கே போக்குவரத்து சாதனத்தை நல்ல முறையிலே அமைப்பதற்காக வாவது அந்தச் சிலையை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தச் சிலை அங்கு இருப்பதால் தான் போக்குவரத்து கட்டுப்பாடு செய்வதற்கு சௌகரியமாக இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI A. A. RASHEED : Have the Government received any offers from foreign countries for these statues?

THE HON. SRI C. SUBRAMANIAM : We have not advertised calling for offers.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மாகாணத்தில் இருக்கக்க கூடிய எல்லா ஏகாதிபத்தியவாதிகளுடைய சிலைகளையும் அப்புறப்படுத்தி, அவைகளுக்குப் பதிலாக இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தி, நேரு போன்றவர்களுடைய சிலைகளை வைக்கவேண்டும்.

அதேநேரத்தில், இந்த சட்டசபைக்கு முன்னாலே, நமக்கெல்லாம் ரொம்ப அவமானகரமாக இருக்கக்கூடிய ஒரு சிலை இருக்கிறதே அதை அப்புறப்படுத்திவிட்டு, அதற்குப் பதிலாக கட்டபொம்மன் சிலையை அங்கே உடனடியாக வைப்பதற்கு சர்க்கார் முன்வருமா—சுதந்திர தினத்திற்கு முன்பாக ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம்முடைய தேசிய தலைவர்களுடைய உருவச் சிலைகளை சர்க்காரே முன்வந்து வைப்பது என்னும் கொள்கை இப்பொழுது இல்லை. தனிப்பட்டவர்களோ, ஸ்தல ஸ்தாபனங்களோ எங்காவது வைப்பதற்கு உத்தேசம் இருந்தால், அதற்கு வேண்டிய உதவியை சர்க்கார் அளிக்கிறது.

இங்கே இருக்கும் சிலையைப் பொறுத்தவரையில், அது கனம் சபாநாயகர் அவர்களே முடிவு செய்யவேண்டிய விஷயம். இந்தச் சிலை இந்த சட்ட சபையைச் சார்ந்ததாக இருக்கக்கூடியது. அதைப்பற்றி கனம் சபாநாயகர் அவர்கள் எந்த முடிவு செய்தாலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

Sri K. VINAYAKAM : Sir, was it the considered opinion of this Government some time back that these statues of the foreigners should be retained in places where they are so as to constantly remind us that we were once subjected to foreign rule lest we should fall once again a prey to anybody's domination? When did this Government change that view and how is it that they should now wait for public opinion to remove these statues?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, that was not the considered policy decision of this Government. I think I mentioned once that that aspect should also be taken into consideration in coming to a decision. The present policy of the Government is to remove all the statues which are offensive to Indian sentiment.

Sri R. KRISHNASAMI NAIDU : தலைவர் அவர்களே, நம் நாட்டில் விடுதலைக்காகப் போராடிய பெரியவர்களுடைய சிலைகளை ஆங்காங்கே ஏற்படுத்துவது அவசியம் என்பதை ஒப்புக்கொள்வதோடு கூட, இந்தத் தலைமுறையில் வாழும் சிறுவர் சிறுமியர்களும், மற்ற பிரஜைகளும் சுதந்திர நாட்டின் பிரஜைகள் என்ற பொறுப்புணர்ச்சியோடு முற்கால, பிற்கால சரித்திர வரலாறுகளை ஒப்பிட்டுப் பார்த்து, நிலைமைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு அதன்படி தகுந்த பிரஜைகளாக வளரும்வரை, உணர்ச்சி வசப்படாமல் சரித்திர வரலாறுகளை அறிந்து கொள்ளுவதற்கும் சில சிலைகள் இருப்பது அவசியம் எனக் கருதியும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன ஆலோசனைக்கு நான் மிகவும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Sri A. GOVINDASAMY : மந்திரி அவர்கள் சற்றுமுன் சொன்ன பதில் ஏற்கெனவே சொன்ன பதிலுக்கு முரணாக இருக்கிறது. எந்தக் கருத்தை அரசாங்கம் திட்டமாக வைத்திருக்கிறது என்பதை அறிய முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : நான் சொன்ன பதில்களை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்து வந்திருப்பார்களானால், கொள்கையைப் பொறுத்த மட்டில்—இப்பொழுது தற்காலீகமாகச்—சொல்லுகிறேன். பின்னால் என்ன முடிவு எடுக்கப்படும் என்பதை நான் சொல்வதற்குத் தயாராயில்லை ; சொல்லத் தகுதியும் இல்லை—"ஆட்சேபகரமாக இருக்கக் கூடிய சிலைகளை ஆகஸ்டு மாதம் 15-ந்தேதிக்குள்ளாக அகற்றிவிடுவது என்பது" சர்க்காருடைய கொள்கை என்பதை அவர்கள் அறிந்திருக்கலாம். ஆனால், எவை எவை ஆட்சேபகரமான சிலைகள் என்பதை இங்கு இருக்கும் கனம் அங்கத்தினர்களுடைய யோசனையையும் எடுத்துக் கொண்டு முடிவு செய்யத் தயாராயிருக்கிறோம் என்று நான் சொன்னேன். இதுதான் சர்க்கார் இப்பொழுது அனுசரித்து வரும் கொள்கை.

மற்றும் இருக்கக்கூடிய சிலைகளைப்பற்றி வெவ்வேறு அங்கத்தினர்கள் வெவ்வேறு அபிப்பிராயம் சொன்னார்கள். அதில் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. இதையெல்லாம் ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

Meters for private water taps

* 99 *Q*.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of
9-10 a.m. Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether Municipal Council, Tiruchirappalli, has made recently any representation to the Government for dropping the proposal to fix meters for private water taps?